உ

சிவசுப்ரமண்யர்பேரில்

கிளிக்கண்ணி.

சென்னை.

ஸ்ரீ ஆதிமூலம்பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

1922,

உ

கடவுள் துணை.

கிளிக்கண்ணி.

விநாயகர் துதி.

தூண்டிற்பவீட்டுவழி சொல்லுங்கருணைபொழி
தூண்டிவிநாயகனைத் தோத்தரித்தே-பாண்டிவள
நாட்டிற்சிறந்தசெந்தில் நாயகன்மேல்லூற்றிரெண்டு
தேட்டுங்கிளிக்கண்ணி செப்புவேன்.

நூல்.

ஆனை அழைத்தவண்டி ஆறுமுகமானவண்டி
கோழிக்கொடியோனடி — கிளியே
கொண்டுவரவேணுமடி

கைவளையல்விற்றவண்டி காட்டில்மரமானவண்டி
சுனையில்புகுந்தவண்டி — கிளியே
சுந்திரமாய்நின்றவண்டி

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுகவேலவனைச்
செந்திற்குகந்தவனைக் — கிளியே
சேரமனந்தேடுதடி

கூடிக்குலாவிமெத்த குகனோடுவாழ்ந்ததெல்லாம்
வேடிக்கையல்லவடி — கிளியே
வெகுநாளைத்தொந்தமடி

நீலமயில்வாகனனால் நெஞ்சங்கரைந்ததன்றி
பாலுங்கசப்பாச்சுதடி — கிளியே
பசலையும்பற்றுதடி
சேமநிதிபாடைபணி சென்றாலும்சிறுதயர்
காமங்கெடுக்துயரம் — கிளியே
கன்னிகைமார்களுக்கெல்லாம்
மாலைவடிவேலவர்க்கு வரிசையாய்நாமெழுதும்
ஓலையுமகிருக்காச்சுதே — கிளியே
என்உள்ளமுங்கிருக்காச்சுதே
ஊரார்வகைசெல்லவும் உற்றார்வகைசொல்லவும்
வாராதுவார்த்தையெல்லாங் — கிளியே
வந்துவந்துபோகுதடி.
ஐந்துவயதினிலே அரியாப்பருவத்திலே
பிஞ்சிலேகூடினேனடி — கிளியே
பிரியமனங்கூடுதில்லை
வள்ளிக்குகந்தவனை மருவியிருந்தவிதங்
கள்ளப்புணர்ச்சியல்லவடி — கிளியே
கற்புநிலையப்படியடி
அந்தந்தநாளையில் நானறியமாட்டாமற்கூடிவிட்டேன்
இந்தவிதிவருமென்று — கிளியே
நான் எண்ணியறிந்தேனில்லை
எல்லார்க்குமொருவிதம் எனக்குமொருவிதமடி
வல்லார்க்கும்வல்லவனுங் — கிளியே
மால்மருகன் றந்தையையல்

எட்டாம்பழமடியோ யிரகாசதேனடியோ
மட்டில்லாவானந்தமே கிளியே
மால்மருகன் நந்தசுகம்

சுட்டும்பொருளுமற்றுச் சும்மாயிருக்கவைத்தான்
எட்டிரண்டுமறியேனடி கிளியே
ஏமாந்திருந்தேனடி

மோகந்தவிர்க்கவென்னை முந்திபிடித்திழுத்து
ஏகவெளிதனிலே கிளியே
என்னைக்கலந்தானடி

வள்ளிகணவன்பேரை வழிபோக்கர்சொன்னாலும்
உள்ளங்குழைபுதடி கிளியே
ஊனுமுருகுதடி

எட்டிஎட்டிப்பார்ப்பவர்க்கு எட்டஎட்டநிற்குமது
சுட்டுக்கடக்காதடி கிளியே
என்னைசுத்திரத்தின்பேருநவம்

கனல்மதுரமொழிகட்டழகனெனுங்குறவன்
என்னபொடிபோட்டானடி கிளியே
இணைபிரியக்கூடுதில்லை

அறிவென்றனப்பால் அறிவதுதன்னையென்றான்
பிரிதொன்றுமில்லையென்றான் கிளியே
பேசாதிருந்தானடி

அலைந்துதிரிபவர்க்கு ஆசையுண்டுதாபமுண்டு
கலந்துசுகிப்பவர்க் கிளியே
கண்ணீரும்வாராதடி

கானமயிலேறுமென்றன் சட்டமுகன்றந்துவரும்
ஆனந்தமென்பதெல்லாங் கிளியே
அழுததவிப்பதடி

உண்டார்க்கிருக்கவைக்கும் தன்மனைக்குள்ளேயிருந்த
கண்டாற்க்கிறுவகைக்கும் கிளியே
என்கட்டமுகன்பேருருவம்

தாழ்வாரைகைதூக்கித் தன்மனைக்குள்ளேயிருந்த
வாழ்வாரைவாழ்த்துமடி கிளியே
மால்மருகன் றன்கருணை

எட்டும்வரைக்கும்துன்பம் எட்டிவிட்டார்பேரின்பம்
தட்டினாலும்போகாதடி கிளியே
தானாயறிந்தேனடி

மணந்தகுழலிருந்தோன் மற்றவழகிருந்தோன்
குணந்தான்குறியாயோ கிளியே
சோலமயில்வாகனர்க்கு

சொல்லாதசொல்லும்வருந்துறவும்வருந்தோட்டம்
கல்லாதகலவிவரும் கிளியே
என்கணவரைச்சேர்ந்தவர்க்கு

என்னோடுடன்பிறந்தார் எத்தனையோர்பேர்கள்பட்டார்
அத்தனைபேர்கள்பட்டேங் கிளியே
அவனாசைபோகுதில்லை

மாடுமனைபோனாலென்ன மக்கள்சுற்றம்போனாலென்ன
கோடிசெம்பொன்போனாலென்ன கிளியே
குறுநகைபோதுமடி

முத்துநகைக்குமவன்மோனவழிவார்த்தைகட்கும்
பித்துபிடித்தேனடி கிளியே
பேசுதற்குகூசுதடி

ஆடுமயில்வாகனனுலஅன்றுமுதற்பட்ட—துயர்
ஏடுமடங்காதடி கிளியே
எல்லாமெழுதவென்றால்

என்னைகெடுத்தானபின் என்னதானென்றுசொன்னாய்
தன்னையுங்கெடுத்துக்கொண்டான கிளியே
சண்முகத்தினமாயவித்தை

பாதியுள்ளபேர்களுக்குப்பயனதரும்பொருளது
முத்திபெற்றபேர்கட்கெல்லாம் கிளியே
முடிவைக்குஞ்செம்பொனனது

ஊனம்வருமெனறறியேன உள்ளுக்குள்ளேகலந்தே
மானம்பறிபோச்சுதடி கிளியே
மற்றவர்க்கேச்சாசசுதடி

அஞ்சியொடுங்கினேனே அழுதுகலித்துநின்றேனே
பஞ்சுபாடுபட்டேனே கிளியே
எனபாக்கியத்தைக்காணவென்று

கொஞ்சியிருப்பார்கள் குதலைமொழிமாதரெல்லாம்
அஞ்சியிருப்பேனடி கிளியே
என-ஆறுமுகவேலவர்க்கு

மோகமெத்தவானாலும் முனனும்பினனுமாய்பார்த்து
ஏமாந்தவேளையிலே கிளியே
எனக்குறையைச்சொல்வேனடி

முதியாதொருவார்த்தைவாயிருந்துவந்துவிடும்
எதிரொன்றுசொல்லாதடி கிளியே

எந்தன்வண்டும்சொந்தமடி
சிவசிணுக்கிடுவார்செந்தூரப்பொட்டிடுவார்
மேவியிருந்திடுவார் கிளியே

விகற்பமொன்றுமில்லையடி
வைவேன்பிணங்கிடுவேன்மறுத்துவரவிடுவார்
பொய்மையொன்றுங்கூடாதடி கிளியே

என்-பொன்னின்வடிவேலவர்க்கு
பேசியிருக்கிறார்கள்பித்தமுதல்நோய்களுக்கு
ஆசைக்கொருமருந்தைக் கிளியே

அங்கெழுதிவைத்தாரில்லை
சரியாயெழுதிவந்தும்தங்கவடிவேலவனை
பிரியாவெழுத்தெழுதக் கிளியே

பிரமன்மறந்தானடி
இரண்டென்றனப்பால்இரண்டுமொன்றுமென்றன்
ஒன்றென்றுமில்லையென கிளியே

உணர்வுதெரியவில்லை
தாரணியோர்கள்மெச்சத்தனியரசுசெய்துவந்தேன
சீரடிவாய்வந்ததனால் கிளியே

என-சீரலைவாச்சுதடி
எதம்பேதமுனக்கினறமொனறுமானாலும்
பேதமிருக்குமட்டும கிளியே
சேர்ந்துசுகித்திடினறுன

ஆதாரவாய்க்கூடினும் அங்குபிரிந்திடினும்
பேதமற்றுவாழ்வதுவே கிளியே
பெருவாழ்வெனறுசொனனான
ஞானபேதையாதலினல்லாதெனனசொனனாலும்
பேதமெனறெண்ணேனடி கிளியே
பேதமிருக்காதடி
சேர்க்கையிலெனகணவன இடமெனசொனனாலும்
ஏக்கமெடுக்குதடி கிளியே
என-இனபமுருகுதடி.

கிளிக்கண்ணி-முற்றிற்று.